
ஶ்ரீ:

ஶ்ரீமாந் வேங்கட நாதார்ய: கவிதார்க்கிக கேஸரி !

வேதாந்தாசார்ய வர்யோமே ஸந்நிதத்தாம் ஸதாஹ்ருதி !!

******

திருப்பாவையின் 7ம் பாசுர விசேஷங்களை அனுபவிக்கு முன் ஸ்வாமி நிகமாந்த மஹா தேசிகன் கோதாப் பிராட்டியின் பெருமையைப் போற்றி அருளியுள்ள கோத ஸ்துதி எனும் க்ரந்தத்திலிருந்து 7ம் ஶ்லோகத்தையும், அதன் பொருளையும் முதலில் அனுபவித்து விட்டு, மேற்கொண்டு திருப்பாவையின் 7ம் பாசுரத்தின் விசேஷார்த்தங்களை அனுபவிப்போம்.

	**வல்மீகத: ஶ்ரவணதோ வஸுதா$_{4}$த்மநஸ் தே ஜாதோ ப$_{3}$பூ$_{4}$வஸ முநி: கவிஸார்வபௌ$_{4}$ம: | கோ$_{3}$தே$_{3}$ கிமத்பு$_{4}$த$_{3}$மித$_{3}$ம் யத$_{3}$மீ ஸ்வத$_{3}$ந்தே வக்த்ராரவிந்த$_{3}$ மகரந்த$_{3}$ நிபா$_{4}$: ப்ரப$_{3}$ந்தா$_{4}$: ||** - (கோதா ஸ்துதி - 7)	

<u>கோதா ஸ்துதி:</u>

கோதா பிராட்டியே, பூமியில் உள்ள மண்புற்று பூமாதேவியின் செவி/காது என்று வேதம் சொல்கிறது. நீ பூமிதேவியின் அம்சமாக இருப்பதால் புற்று உனக்கும் காதாகிறது. புற்றாகிய உனது காதில் தோன்றிய வால்மிகி மஹரிஷி அற்புதமான ராமாயணத்தை பாடி கவிச்சக்ரவர்த்தியானார். உனது காதில் தோன்றிய வால்மிகி முதன்மையும், தலைமையும் பெற்றார் என்றால், உனது தாமரையொத்த முகத்தில் தோன்றிய பிரபந்தங்கள் எங்களுக்கு அமிர்தமாக இனிப்பது என்ன ஆச்சர்யம்?.

***

திருப்பாவை – 7ம்பாசுரம்:

கீசு கீசு என்று எங்கும் ஆனைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கை பேர்த்து
வாசநறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்

ஓசைப்படுத்த தயிர்அரவம் கேட்டிலையோ!

நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி

கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ!

தேசமுடையாய்! திறவேலோ ரெம்பாவாய்.

பாசுரத்தின் பொதுவான அர்த்தம்:

" ஒளி வீசும் முகத்தைக் கொண்ட என் தோழியே, பொழுது புலர்ந்ததின் அடையாளமாக ஆனைச்சாத்தன் குருவிகள் கீசு கீசு என்று தங்களுக்குள் பேசும் இனிய சிலிர்ப்பொலி உனக்குக் கேட்கவில்லையா மணம் வீசும் கூந்தலை உடைய ஆயர் குலப் பெண்கள் விறுவிறுப்பாக கைகளை மாற்றி மாற்றி மத்தினால் தயிர் கடையும் போது அவர்களின் அச்சுத்தாலியும், ஆமைத்தாலியும் கல கலவென்று என்று ஒலிக்கும் சப்தமும் உன் காதுகளில் விழவில்லையா? கோபியர் கூட்டத்திற்குத் தலைவியே! நாராயணனின் திருவவதாரமான கேசவன் என்னும் கண்ணனின் புகழை நாங்கள் பாடிக் கொண்டிருப்பதும் செவியில் விழாமல் இன்னும் நீ படுத்துறங்குவது போல் இருப்பது தகுமோ? கலாகுமோ? ஒளி வீசும் முகத்தைக் கொண்ட என் தோழியே, எழுந்து கதவைத் திறந்து, எங்களுடன் பாவை நோன்பை மேற்கொள்ள வருவாயாக .

இது இப் பச்சுரத்தின் பொதுவான அர்த்தம்.

ஆழ்வார்களைத் துயிலெழுப்புவதாக அனுபவிக்கும் 10 பாசுரங்களில் இந்த பாசுரம் இரண்டாவது பாசுரம். இந்தப் பாசுரத்தில் **குலசேகர ஆழ்வாரை** துயிலெழுப்புவதாக பூர்வர்கள் அனுபவித்துள்ளார்கள். .

இந்தப் பாசுரத்தின் சில சிறப்பம்சங்களை முதலில் கோடிட்டுக் காட்டி விண்ணப்பிக்கிறேன்.

எம்பெருமானின் பன்னிரண்டு திருநாமங்களில் முதல் இரண்டு திருநாமங்கள் “கேசவன்“, “நாராயணன் “ என்ற திருநாமங்கள் என்பதால் **“நாராயணன் மூர்த்தி கேசவனைப் பாடவும்“** என்று இந்த முதல் திருநாமங்களைச் சொல்லி கோதைப் பிராட்டி இந்தப் பாசுரத்தில் அருளியுள்ளது இப்பாசுரத்தின் சிறப்பு.

இந்தப் பாசுரத்தில் **நாராயணன்** என்ற திரு நாமத்தை 3 பாசுர வரிகளில் ஆண்டாள் நாச்சியார் பாடியுள்ளார்.

1. நாராயணனே நமக்கே பறை தருவான் – 1வது பாசுரம்
2. நாயகப் பெண் பிள்ளாய் நாராயணன் மூர்த்தி - 7வது பாசுரம்
3. நாற்றத் துழாய் முடி நாராயணன் நம்மால்- 10வது பாசுரம்

இந்தப் பாசுரத்தில் **கேசவன்** என்ற திரு நாமத்தை 2 பாசுர வரிகளில் ஆண்டாள் நாச்சியார் பாடியுள்ளார்.

1. கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ – 7வது பாசுரம்
2. வங்கக் கடல் கடைந்த மாதவனை கேசவனை – 30வது பாசுரம்

இந்தப் பாசுரத்தில் செவிக்கும், மனதிற்கும் இனிமை தரும் பல மங்கள ஸப்தங்களிக் கோர்த்து மாலையாக்கி பாமாலையாகப் பாசுரத்தை அமைத்துள்ளாள் ஆண்டாள் நாச்சியார். மனதிற்கும் செவிக்கும் இனிமையான அந்த ஸப்தங்கள்:

1. கீசு கீசு "என்று ஆனைச்சாத்தன் குருவிகள் கிரீச்சிட்டு எழுப்பும் ஒலிகள்.
2. ஆய்ச்சியர்கள் தயிர் கடையும் போது, ஆய்ச்சியரின் அச்சுத்தாலியும், ஆமைத்தாலியும் அசைவதால் கலகலவென்று எழும் ஓசை.
3. ஆய்ச்சியர்கள் தயிர் கடையும் போது எழும் மத்தின் ஸப்தம்
4. கேசவா நாராயணா என்ற நாம சங்கீர்த்தன பேரரவம்

இனி, பாசுரத்தின் விசேஷ அர்த்தங்கள்:

கீசு கீசு என்று எங்கும் ஆனைச்சாத்தன் கலந்து பேசின பேச்சரவம்..............



இந்தப் பாசுரத்தில் ஆண்டாள் **ஆனைச்சாத்தன்** என்ற பட்சியைக் குறிப்பாகச் சொல்லியுள்ளதைக் கவனிக்க வேண்டும். வலியன் குருவி, செம்போத்து, பாரத்வாஜக் குருவி, இரட்டைவால் குருவி, கரிக்குருவி, கரிச்சான் குருவி, நாகணவாய்ப்புள், மைனா, பூவை, நார்த்தம்பிள்ளை, நாவனத்தி, ராமனாத்தி என்று பல பெயர்களில் இந்தக் குருவி அழைக்கப்படுகிறது. வடமொழியில் (சமஸ்க்ருதம்) இந்தக் குருவி "கஞ்ஜரிக:" என்று அறியப்படுகிறது. பழக்கினால், இந்தக் குருவி கிளியைப் போல் பேசும் என்று

சொல்லப்படுகிறது. நாயகி பாவத்தில், எம்பிரானிடம் தன் நிலை சொல்ல இந்த பூவைக் குருவியைத் தூது அனுப்பியதாக நம்மாழ்வாரின் 1ம் பத்து 4ம் பதிகம் 8ம் பாசுரம் உள்ளது.

நீயலையே சிறுபூவாய். நெடுமாலார்க் கென்தூதாய்

நோயெனது நுவலென்ன, நுவலாதே யிருந்தொழிந்தாய்

சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான் இனியுனது

வாயலகில் இன்னடிசில் வைப்பாரை நாடாயே - (திருவாய் மொழி 1-4-8)

இதே போன்றே, 8ம் பத்து 2ம் திருவாய்மொழி 8ம் பாசுரத்திலும், பராங்குச நாயகியின் பிரிவாற்றாமைத் துயர் கூறும் பாசுரத்தில் **“……. யான் வளர்த்த கிளிகாள்! பூவைகள்காள்! குயில்கல்கள்காள்! மயில்கள்காள்………..”** (தி.மொ. 8-2-8) என்று இந்தக் ஆனைச் சாத்தன் அல்லது பூவைக் குருவியைப் பற்றிய குறிப்பு உள்ளதைக் காணலாம்.

இது குருவியைப் பற்றிய சிறு குறிப்பு.

ஏன் ஆண்டாள் குறிப்பாக ஆனைச் சாத்தன் என்று கையாண்டுள்ளாள் என்று ஓர்ந்து தெளிதல் வேண்டும். இந்தக் குருவி பழக்கினால் பேசும் திறன் கொண்டதாலும், எழுப்பும் ஒலி “கீச்”, “கீச்” என்று இருப்பதாலும், இவ்வகைக் குருவிகள் இணைகளாகவும், சிறு சிறு கூட்டங்களாகவும் வசிக்கும் இயல்புடையனவாகவும், பொதுவாக மனிதர்கள் வாழும் இடங்களின் அருகில் ஒன்றி வாழும் இயல்புடையவை என்பதாலும், அழகிய கண்களைக் கொண்டவை என்பதாலும், மனிதர்கள் பிரியமாக வளர்க்க விரும்பும் குருவி இனங்களில் ஒன்று என்பதாலும் இருக்கலாம். எனவே, தோழியின் வீட்டின் எதிரே நின்று உள்ளே உறங்குவது போல் இருந்த அழகிய தோழியை எழுப்ப, அழகிய கண்களை உடைய ஆனைச் சாத்தன்களின் கீச் கீச் ஒலியை உதாஹரித்துக் காட்டியுள்ளாள் போலும். இது, சொற்களின் பொதுவான பொருள் கொண்டு அறிவதாகும்.

இரண்டாம் பாசுரத்தில் “கேளீரோ“ என்றருளியவள், இந்த பாசுரத்தில் “கேட்டிலையோ“ என்று சற்று அழுத்தத்துடன் அருளியுள்ளதால், உள்ளுரைப் பொருளைச் சற்று மேலும் ஆய்ந்து தெளியுங்கள் என்று வலியுறுத்துவது தெளிவாகிறது.

“கீசு கீசு “ என்று ஆனைச்சாத்தன் எழுப்பும் ஸப்தத்திற்கு “அநக்ஷர ரஸமாயிருக்கை“ என்று வ்யாக்யானம் அருளியுள்ளார் ஸ்வாமி பெரியவாச்சான் பிள்ளை. அதாவது, அவை பேசும் அக்ஷரங்கள் தெரியாவிடினும், அவை எழுப்பும் ஸப்தம் ஆனந்தமாக உள்ளது என்பதாகும்.

ஈசாவாஸ்ய உபநிஷத் 1ம் வாக்யத்தில் **ஈஶாவாஸ்யம் இத$_3$ம் ஸர்வம் யத் கிஞ்ச ஜக$_3$த்யாம் ஜக$_3$த்** என்று யார் உலகில் உள்ள அனைத்து சேதன அசேதன பொருள்களும் வ்யாபித்துள்ளானோ, அவனே பரப்ரஹ்மம் என்று அடையாளம் காட்டுகிறது. இதைத்தான் நம்மாழ்வார்

திடவிசும் பெரிவளி நீர்நில மிவைமிசை
படர்பொருள் முழுவது மாயவை யவைதொறும்
உடல்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியு ளிவையண்ட சுரனே - (திருவாய்மொழி 1-1-7)

என்றும்,

பரந்ததண் பரவையுள் நீர்தொறும் பரந்துளன்
பரந்த அண்டமிதென நிலவிசும் பொழிவற
கரந்த சில் இடந்தொறும் இடந்திகழ் பொருடொறும்
கரந்தெங்கும் பரந்துளன் இனிவையுண்ட கரனே - (திருவாய்மொழி 1-1-10)

என்றும் விபுவாய் எம்பெருமான் எங்கும் வ்யாபித்திருப்பதை அருளியுள்ளார்.

இந்த ஈசாவாஸ்ய உபநிஷத் வாக்யத்தையும், திருவாய்மொழிப் பாசுரங்களையும் மனதில் கொண்டு அவை விளக்கும் பேருண்மையின் அடிப்படையில், உள்ளுரைப் பொருள் அறியலாம்.

"கீஶ" என்னும் சொல்லை **க: + ஈஶ** என்று பிரித்துப் பார்த்தால் **க: + ஈஶ = கீஶ** என்றாகும். இந்த கீஶ என்பதை கீசு என்று தமிழில் சொல்லியுள்ளாள் என்று கொண்டு, ஈஶாவாஸ்ய உபநிஷத்தால் "ஈஶன்" என்று கூறப்படுபவன் **க: ? யார்?** என்று பறவைகள் கேட்பதாகவும், இக்கேள்விக்கு 6வது பாசுரத்தில் **ஹரி** என்று முனிவர்களும் யோகிகளும் பதில் கூறியிள்ளார்களெனவும் பொருள் கொண்டால், (வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும் மெள்ள எழுந்து அரி என்ற பேரரவம் உள்ளம் புகுந்து....) உபநிஷத் காட்டும் ஈஶன் ஹரி என்றாகி, இதைத்தான் ஆண்டாள் நாச்சியார் **"கீசு"** என்று இந்த 7ம் பாசுரத்தில் சொல்லி ஆரம்பித்துள்ளாள் என்று உள்ளுரைப் பொருள் உணரலாம். எனவே தான், "கீச்", "கீச்" என்று குரலிடும் ஆனைச்சாத்தனை உதாஹரித்துள்ளாள் என்றும் கொள்ளலாம்.

"கீசுகீசென்று எங்கும் கலந்து பேசின பேச்சு" என்பதற்கு சற்று எளிமையாகவும், ஹாஸ்யமாகவும் பொருள் அனுபவிக்கலாமா!.

கீசு கீசு --- "க்ருஷ்ணா, க்ருஷ்ணா --- கிச்சா, கிச்சா" என்று எங்கும் ஆனைச்சாத்தன் கலந்து நாராயணன் மூர்த்தி கேசவனைப் பாடுவதை நீ கேட்டே கிடத்தியோ! என்று ஆண்டாள் சொல்வதாக அனுபவிக்கலாம். (நடைமுறையில் நல்ல பெரைச் சுருக்கி க்ருஷ்ணனை கிச்சா என்றும் நரசிம்ஹனை நச்சு என்று அழைக்கின்றோம் அல்லவா). ஆறறிவு பெற்று மற்ற உயிரினங்களிடம் மேம்பட்டவர்கள் என்று பெருமைப் படும் நாமே இப்படி நல்ல சொற்களைச் சிதைத்துச் சுருக்கிச் சொல்லும் போது, குருவி க்ருஷ்ணா, க்ருஷ்ணா என்பதை கிச்சா, கிச்சா என்று சொன்னால் வியப்பில்லை. இது யதார்த்தமாக சொன்ன பொருள்.

ஆண்டாள் நாச்சியார் தான் அருளியுள்ள நாச்சியார் திருமொழியில் குருவிகள் எம்பெருமானின் பேரைச் சொல்லித் திரிகின்றன என்பதை,

காலை யெழுந்திருந்து கரியகுரு விக்கணங்கள்,
மாலின் வரவுசொல்லி மருள்பாடுதல் மெய்ம்மைகொலோ,
சோலை மலைப்பெருமான் துவராபதி யெம்பெருமான்,
ஆலி னிலைப்பெருமான் அவன் வார்த்தை யுரைக்கின்றதே

- (நாச்சியார் திரு மொழி 91)

என்று ப்ரம்ம முகூர்த்த வேளையில் குருவிகள் "மாலே", "மாலே" ---- கீசு கீசு --- "க்ருஷ்ணா, க்ருஷ்ணா --- கிச்சா, கிச்சா" என்று எங்கும் மாலின் வரவு சொல்லி பாடுகின்றனவே என்று அழகாகச் சொல்லியுள்ளதையும் இங்கு அனுபவிக்க வேண்டும்.

ஆனைச்சாத்தன் கலந்து பேசின பேச்சரவம்.............

சாத்தன் என்ற சொல்லுக்கு தலைவன் என்றும் தண்டிப்பவன் என்றும் இரு வேறு பொருள் உண்டு. சாத்தன் என்ற சொல்லின் இரண்டு பொருள்களையும் ஆனைச்சாத்தன் என்ற சொல்லில் பொருத்திப் பொருள் கொண்டால், **ஆனை + சாத்தன் = ஆனையைக் காத்தவன்** என்றும், **ஆனை + சாத்தன் = ஆனையைக் மாய்த்து தண்டித்தவன்** என்றும் இரு விதமாகப் பொருள்பட்டு, கஜேந்திரன் என்ற ஆனையைக் காத்தவன் (கஜேந்திர மோக்ஷம்), கம்சனின் குவலயாபீடம் என்ற ஆனையை மாய்த்தவன் (க்ருஷ்ண லீலை) என்றும் பொருள் தரும். (இங்கு 'யானை' 'ஆனை' என்றானது). இவ்வாறு பொருள் கொண்டால், யானையைக் காத்தவனும், யானையை மாய்த்தவனும் ஆன எம்பெருமானைக் குறிப்பதாகப் பொருள் கொண்டு, அடியவர்களின் புலன் சார்ந்த உணர்வுகளை நெறிப்படுத்தி, தன் வசம் சேர்த்துக் கொள்ளும் பரந்தாமனை உள்ளர்த்தமாகக் கொண்டுள்ளது என்று உள்ளுரைப் பொருளை உணரலாம்.. இவ்வாறு பொருள் கொண்டால், **ஆனைச் சாத்தன் கலந்து பேசின பேச்சரவம்** என்பது எம்பெருமானின் கீதோபதேசத்தைக் குறிப்பில் உணர்த்துகிறது

என்றும் பொருள் கொண்டு, அந்த எம்பிரானைப் போற்றிப் பாடி, அவன் சரணங்களில் ஶரணடைய ஆண்டாள் இங்கு தோழியை வியாஜமாகக் கொண்டு, அஞ்ஞானத்தில் இருக்கும் சேதனர்களான நம்மை பரமனடி பாடி உகந்து உய்ய அழைக்கின்றாள் என்று உள்ளுரைப் பொருளை அனுபவிக்கலாம்..

மற்றொரு வகையில், ஆனைச்சாத்தன் என்பதை **ஆசார்யர்களாகவும்** அனுபவித்துப் பொருள் கொள்ளலாம். எம்பெருமான் **ஸ்ரீக்ருஷ்ணன் தானே முதல் ஆசார்யன்**! எனவே, லக்ஷ்மி நாதன் முதல் ப்ரக்ருதம் ஆசார்யன் வரை, குரு பரம்பரையில் வந்த எல்லா ஆசார்யர்களையும், இனி வரப்போகும் பவிஷ்ய ஆசார்யர்களையும் ஆனைச்சாத்தன் என்று ஆண்டாள் திருவுள்ளம் கொண்டு அருளியுள்ளாள் என்றும் அனுபவிக்கலாம்.

தே$_3$ஶிகாஸ்தத்ர தூ$_3$தா (த்$_3$ரமிடோ$_3$பநிஷத் தாத்பர்ய ரத்னாவளி – 3)

என்று த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்னாவளியில் ஸ்வாமி தேசிகன் ஸாதித்துள்ளபடி, நம் ஆசார்யர்களை பக்ஷியாக உவகரித்துக் காட்டியுள்ளாள் ஆண்டாள். “**சேர்ப்பாரை பக்ஷிகளாக்கி ஜ்ஞான கர்மங்களை அப்பக்ஷிகளின் சிறகுகள்**” என்று அனுபவிக்கலாம். ஆசார்யன் என்ற பறவைக்கு ஜ்ஞானம், அனுஷ்டானம் என்ற இரண்டும் இரண்டு சிறகுகள். ஆகவே **ஆனைச் சாத்தன் கலந்து பேசின பேச்சரவம்** என்று ஆசார்யர்களின் உபதேசங்களைக் குறிப்பிடுகிறாள் என்றும் உள்ளுரைப் பொருள் கொண்டு, இந்தப் பாசுரம் ஆசார்ய பெருமையை விளக்கும் பாசுரம் என்று தெளியலாம்.

பகவானிடத்தில் அத்யந்தமாக பூரண விஸ்வாசத்துடன் பக்தி பண்ண வேண்டும். 2ம் நாள் பாசுரத்தில் கோதாப்பிராட்டி “உய்யும் ஆறு” என்று நம் உய்விற்கு – ஜீவாத்மாக்களின் உய்விற்குக் காட்டிய ஆறு வழிகளை பலவிதமான ஸ்வாபதேசங்களக் கொண்டு அனுபவித்தோம் அல்லவா! ஸ்வாமி நிகமாந்த மஹா தேசிகன் ரஹஸ்யத்ரயஸாரத்தின் உபோத்காதிகாரத்தில் சொல்லும் ஆறு கட்டளைகளை இந்தப் பாசுரத்தின் ஸ்வாபதேசமாக-உள்ளுரைப் பொருளாக அனுபவிக்கலாம்.

ஈச்வரஸ்ய ச ஸௌஹார்த$_3$ம் – யத்ருச்சா$_2$ ஸு க்ருதம் ததா$_2$ |

விஷ்ணோ: கடாக்ஷம் அத்$_3$வேஷம் ஆபி$_4$முக்$_2$யம் ச ஸாத்விகை: ||

ஸம்பா$_4$ஷணம் ஷடே$_3$தாநி: - ஆசார்ய ப்ராப்தி ஹேதவ : ||

- (ரஹஸ்யத்ரயஸாரத்தின் உபோத்காதிகாரம்)

பகவானிடம் விசேஷமான பக்தி இருந்தால் நல்ல ஆசாரியனை பகவானே நமக்குக் கொடுத்து நம்மை நல்வழிப் படுத்துவான் என்பது பொருள். (இதன் விளக்கத்தை 2வது பாசுரத்தின் விளக்கவுரையில் எடுத்துக் காட்டியுள்ளதை இங்கு நினைவில் கொள்ளலாம்.)

கேட்டிலையோ பேய்ப்பெண்ணே............... தேசமுடையாய்.........

வீட்டின் வாசலில் நின்று ஆண்டாள் கோஷ்டியினர் அழைக்கும் அழைப்பொலி, ஆனைச்சாத்தன் பறைவகள் எழுப்பும் பேரொலி, ஆய்ச்சியர் காலை வேளையில் தயிர் கடையும் போது ஏற்படும் மத்தொலி, அவர்களின் அச்சுத் தாலி, ஆமைத் தாலி போன்ற ஆபரணங்கள் உரசுவதால் ஒலி, பேரரவமாய் அடியார்களின் நாம சங்கீர்த்தன ஒலி என்று இவ்வளவு ஆரவாரமான ஓசைகளுக்கும் நடுவில் எழுப்பப்படும் பெண் உறங்குவதால் அல்லது உறங்குவது போல் நடிப்பதால், ஆண்டாள் அவளை **"பேய் பெண்ணே"** என்று பொய்க் கோபம் காட்டி எழுப்ப முயல்வது அன்புக் கோபம்.

"பேய் பெண்ணே" என்று கடுஞ்சொல்லால் வைது விட்டோமே என்று உடனே அவளைச் சமாதானம் செய்யும் நோக்கில் இனிமையான சொற்களால், **"நாயகப் பெண்பிள்ளாய்** என்றும், **தேசமுடையாய்"** என்றும் நயமாகப் பாராட்டிச் சொல்வது, அவளை எங்ஙனமாவது எழுப்பி, பரமனடி போற்றிப் பற்ற தங்களுடன் நோன்பிற்கு அழைத்துச் செல்ல விழையும் பாரிப்பு. இப்படி நேரெதிரான பொருள் உடைய சொற்களால் ஒரு பொருண்மையை உணர்த்துகிறாள் ஆண்டாள்.

[குறிப்பு: ஆங்கிலத்தில் இதை oxymoron என்றும் தமிழில் முரண் தொடர் என்றும் சொல்வர். 6ம் பாசுரத்திலும் இவ்வாறு **பேரரவம் - உள்ளம் குளிர்ந்து** என்று ஒன்றுக்கொன்று நேர் எதிரானவையாகத் தோன்றும் சொற்களை இணைத்து ஒரு பொருண்மையை உணர்த்தியுள்ளாள்.]

'பேய்ப்பெண்' என்ற பதம், பகவத் அனுபவத்தில் மூழ்கி விட்டதால், பேதை போலத் தோன்றும் சிறந்த அடியாரைக் குறிக்கிறது. **'வாச நறுங்குழல் ஆய்ச்சியர்'** என்பது உபநிடதங்களையும் சாஸ்த்திரங்களையும் கற்றறிந்த தன்மையையும், 'ஆய்ச்சியர்' என்பது ஆசார்யர்களையும் குறிப்பில் உணர்த்துகிறது. **'காசும் பிறப்பும்'** என்ற ஆபரணங்கள் இங்கே வேதங்களையும் அவற்றிலிருந்து தோன்றிய ஸ்மிருதியையும் குறிப்பில் உணர்த்துகின்றன. இப்பாசுரத்தில் சொல்லப்பட்டுள்ள **காசு, பிறப்பு, தயிர்** என்ற மூன்றும் முறையே **அஷ்டாட்சரம், த்வயம்** மற்றும் **சரமச் சுலோகம்** ஆகிய மூன்று மஹா

மந்திரங்களை உணர்த்தும். இவ்வாறெல்லாமும் ஒர் உள்ளர்த்தம் உண்டு என்றும் அனுபவித்துள்ளார்கள் பெரியோர்கள்.

இவ்வாறு, ஸ்ரீவைஷ்ணவத்தின் உயரிய கோட்பாடான **சரணாகதித்** தத்துவத்தை உணர்த்தும் வகையில் தோழியர்களுடன் கூடியிருந்து பரமனைப் பற்றி அவன் சரணங்களில் ப்ரபத்தி என்ற சரணாகதி செய்ய வைக்க வேண்டும் என்று அவர்களை வலியுறுத்தி அழைப்பதாக இந்தப் பாசுரத்தின் பொருளை உணரலாம்.. தவறு செய்பவன் தான் தனியகப் போவான். ஸத்ஸங்கத்துக்கு கூடி இருந்து குளிரவேண்டும் என்பது தானே நம் ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தம்!! ஸத்சங்கத்திலே கொடுத்தும் கொண்டும் இருப்பதுதானே குணானுபவத்தின் பெருமை!

நேயம் சத்ஜன சங்கே சித்தம்!

தேயம் தீன ஜனாயச வித்தம்!

பஜ கோவிந்தம், பஜ கோவிந்தம்!

"தேசமுடையாய்"....................

"தேசமுடையாய்"என்பது தூங்கும் பெண்ணின் ஒளி வீசும் முகத்தை --- முன்னிறுத்திச் சொன்னது. **"தேசமுடையாய்"** என்றும் துயிலெழுப்பப்படும் பெண் விளிக்கப்படுவதால், அவள் பரம பாகவதை என்பதும் தெளிவாகிறது! அவள் உறங்குவது போல் உள்ளாள் என்பதை அவள் க்ருஷ்ணானுபவத்தில் திளைத்துக் கொண்டிருக்கிறாள் என்று கொள்ளலாம். அத்தகைய தேஜஸ், தாஸ்ய பாவமும், தாஸ்ய ஞானமும் உள்ளவருக்கே --- பரமனே எஜமானன், அவனைச் சரண் புகுதலே உய்வதற்கான ஒரே உபாயம் என்று முழுமையாக உணர்ந்தவர்க்கே! வாய்க்கும்! என்று உணர்த்துகிறாள்.

"தேசமுடையாய்" என்பதை விளக்குவதற்கு வியாக்யனச் சக்ரவர்த்தி ஸ்வாமி பெரிய வாச்சான் பிள்ளை எழுப்பப்படும் பெண்ணின் தேஜஸ் “ஸ்ரீ ராமனின் பராக்ரமத்தைக் கேட்டு சீதாப் பிராட்டியின் திருமுகம் ப்ரகாசமானது போன்று” என்று, நாம் மந்த்ர புஷ்பத்தில் தினமும் அனுசந்தானம் பண்ணும்

“ **தம்த்ருஷ்ட்வா ஸத்ரு ஹந்தாரம் மஹரிஷீணாம் ஸுகாவஹம் பபூவஹ்ருஷ்டா வைதேகி பர்த்தாரம் பரிஷஸ்வஜே**” என்ற ஸ்லோகத்தை உதாஹரிக்கிறார்.

ஸ்ரீ ராமனின் பரக்ரமத்தை

அஸகாய சூரா! அநபாய ஸாஹஸ!!

மஹித மஹாம்ருத தர்ஸந முதித மைதிலீ த்ருடதர

பரிரம்பண விபவ விரோபித விகட வீரவார்ண!! (மஹாவீர வைபவம்)

என்று ஜனஸ்தானத்தில் தனி ஒருவனாய் பதினாயிரம் அரக்கர்களையும் முடித்த ஸ்ரீராமனின் பராக்ரமத்தை மஹாவீர வைபவம் என்ற க்ரந்தத்தில் ஸ்வாமி தேசிகன் ஸாதிப்பார்: நாங்கள் க்ருஷ்ணனின் பராக்ரமத்தைச் சொல்லிக் கொண்டிருகிறோம். நீ இன்னும் உள்ளே உறங்கிக் கொண்டிருக்கிறாயே! ஓடி வந்து க்ருஷ்ணானுபத்தில் திளைக்க எங்களைக் கட்டிக் கொள்ள மாட்டாயா? என்று கேட்கிறார்கள் என்று ராமாயண நிகழ்வை மேற்கோளிட்டு வியாக்யானம் அருளியுள்ளார் ஸ்வாமி பெரிய வாச்சான் பிள்ளை.

காசும் பிறப்பும் கலகலப்பக் கை பேர்த்து

வாசநறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்

ஓசைப்படுத்த தயிர்அரவம் கேட்டிலையோ!...............

ஸ்ரீமத் பாகவத்தில் ஒரு ரசமான அநுபவம் சொல்லப்படும்.

ஆய்ச்சியர் தயிர் கடையும் போது குழந்தை க்ருஷ்ணன் அங்கு போய் "வெண்ணெய் கொடேன்" என்று கேட்பானாம். ஆய்ச்சியர் நீ ஒரு நர்த்தனம் ஆடினால் வெண்ணெய் தருவேன் என்று சொல்வார்களாம். அதன்படி க்ருஷ்ணன் மத்தொலிக்கு ஏற்ப நர்த்தனம் ஆடினான் என்று அனுபவிப்பார்கள். இந்த பரமானுபவத்தை **ஸ்வாமி தேசிகன் கோபால விம்சதியில்** அழாகாகச் சொல்லியுள்ளார்.

"**தத்$_4$நா நிமந்த$_2$ முக$_2$ரேண நிப$_3$த்$_3$த$_4$ தாளம்**

நாத$_2$ஸ்ய நந்த$_3$ ப$_4$வநே நவநீத நாட்யம்" --- (கோபால விம்சதி – 4)

ப்ராதக் காலத்தில் கேட்கப்பட வேண்டிய மங்களமான ஸப்தங்கள் வேத கோஷம், மணியோசை, கருடத்வனி, ஹம்ஸத்வனி, சங்கத்வனி, சுமங்களிகளின் வளையல் ஓசை, தயிர் கடையும் ஓசை, ம்ருதங்க ஓசை, என்று பலவித சப்தங்களை சாஸ்த்ரம் சொன்னதை, **ஓசைப்படுத்த தயிர்அரவம் கேட்டிலையோ** என்று மங்கள சப்தத்தை இந்த பாசுரத்தில் ஆண்டாள் சொல்லியுள்ளாள். இந்த வரிகளை நாம் தினமும் அனுசந்தானம் பண்ணி அனுபவிக்கும் வேங்கடேச சுப்ரபாத வரிகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். ஆனந்தமான அர்த்த விசேஷம் புரியும்.

யோஷா க$_3$ணேன வரத$_3$த்$_4$னி விமத்$_2$ய மானே

கோ$_3$ஷால யேஷு த$_3$தி$_4$ மந்த$_3$ன தீவ்ர கோ$_3$ஷா: |

ரோஷாத் கலிம் வித$_3$த$_4$தே ககுப$_4$ஶ்ச கும்பா$_4$:

ஶேஷாத்$_3$ரி ஶேக$_2$ர விபோ$_4$ தவ சுப்ரபா$_3$தம்!! -(வெங்கடேஸ்வர ஸுப்ரபாதம் 11)

யோஷா க$_3$ணேன = இளமையான பெண்கள் கூட்டம்;

கோ$_3$ஷால யேஷு = பசுக்கள் வாழும் இடைச்சேரியில்,

த$_3$தி$_4$ மந்த$_3$ன = தங்கள் கை வளையல்கள் குலுங்கத் தயிர் கடைகிறார்கள்!

தீவ்ர கோ$_3$ஷா: = தீவிரமான கோஷம் - தயிர் கடையும் பெரும் சப்தம் எழுகிறது!



மத்தினால் ஓசைப்படுத்த தயிர்அரவம்................

அஞ்ஞானத்தில் இருந்த சேதனர்கள் ஆசார்ய ஸம்பந்தத்தால், ஆசார்யர் உபதேசித்து அருளியதினாலும் அதை ஶ்ரத்தையாக ஏற்ற கலங்களாக இருந்து உள்ளத்தில் கொண்டதாலும், ஏற்பட்ட ஞானத்தின் பயனால் "நாராயணனே ஆதிமூலம் – நாராயணனே பரப்ரஹ்மம்" என்ற தெளிதலை, அறியப் பெற்று எம்பெருமானிடம் பற்று கொண்டு ஈடுபட்டு அனுபவிக்கிறார்கள்.

க்$_4$ருதமிவ பயஸி நிகூ$_3$ட$_2$ம் பூ$_4$தே பூதே ச வஸதி விஜ்ஞானம் |

ஸத்தம் மந்த$_2$யிதவயம் மநஸா மந்தா$_2$ந பூ$_4$தேந || (ப்ரஹ்மபிந்து உபநிஷத் – 20)

என்ற ப்ரஹ்மபிந்து உபநிஷத் வாக்யம் நெய் பாலுக்குள் மறைந்து உறைவது போல் ஜ்ஞான வடிவினனான எம்பெருமான் எல்லா ஜீவராசிகளுக்குள்ளும் மறைந்து விளங்குகின்றான். பால் தயிராகி, தயிரை மத்தினால் கடைந்து நெய்யை வெளிக்கொணர்வது போல மனம் எனும் மத்தினால் இடையறாதி தியானித்து அடையும் பகதனுபவம் என்ற தயிரைக் கடைந்தால் எம்பெருமானைக் காணும் பேறு கிடைக்கும் என்றுபகவதனுபவ்த்தின் பயனைச் சொல்கின்றது.

அதாவது பக்தி எனும் மத்தினால் பகவத் அனுபவம் எனும் தயிரைக் கடந்தால் என்பெருமானை அறிஒயும் ஞானம் என்னும் வெண்ணெய் திரண்டு வரும். அந்த ஞானமே நம் உஜ்ஜீவனம் என்று ஆண்டாள் குறிப்பாக உள்ளுரைப் பொருளாக இந்த பதங்களில் உணர்த்துகிறாள்.

ஆலோட்₃ய ஸர்வ ஶாஸ்த்ராணி விசார்ய ச புந: புந: |

இத₃மேகம் ஸுநிஷ்பந்தம் த்₄யேயோ நாராயணோ ஹரி: ||

- (ஸ்ரீத்வாதஶநாம பஞ்சர ஸ்தோத்ரம் – 10)

வேதம் எனும் கடலிலிருந்து எடுத்த சாஸ்த்ரங்களை ஒரு பானையிலிட்டு தன் புத்தி என்ற மத்தினால் கடைந்து, வேத முதல்வனான நாராயணனைக் காண்பவர்கள் ஜ்ஞானத்தினால் மிக்க ஜ்ஞானிகள் என்று ஸ்ரீத்வாதஶநாம பஞ்சர ஸ்தோத்ரம ஶ்லோகம் தெரிவிக்கிறது. இந்த பேருண்மைகளைத்தான் ஆண்டாள் நாச்சியர் மத்தினால் தயிர் கடையும் சப்தத்தை முன்னிட்டுக் காட்டியுள்ளாள் என்று பொருள் கொள்ளுதல் பொருத்தமாக இருக்கும்.

"நாயகப் பெண்பிள்ளாய்" ....

நாயகப் பெண்பிள்ளாய் என்ற சொற்கள் பகவத் அனுபவ ஞானத்தினால், தலைமைப் பண்பைப் பெற்ற அடியார்களைக் குறிக்கிறது என்று கொள்ளலாம்.

ஆழ்வார்களைத் துயிலெழுப்புவதாக அனுபவிக்கும் 10 பாசுரங்களில் இந்த பாசுரம் இரண்டாவது பாசுரம். இந்தப் பாசுரத்தில் **குலசேகர ஆழ்வாரை** துயிலெழுப்புவதாக பூர்வர்கள் அனுபவித்துள்ளார்கள். இதற்கு பல வ்ருத்தாங்கள் சொல்ல முடியும் என்றாலும், சுருக்கமாக ஒன்றிரண்டு அனுபவிப்போம்.

குலசேகரப் பெருமானே (தனது பெருமாள் திருமொழியில்) தன்னைப் **"பேயன்"** என்று கூறிக் கொள்வதாலும்,

பேயரே எனக்கு யாவரும் யானும் ஓர்-

பேயனே எவர்க்கும் இது பேசியென்று

ஆயனே அரங்கா என்று அழைக்கின்றேன்

பேயனாய் ஒழிந்தேன் எம் பிரானுக்கே - (பெருமாள் திருமொழி 3-8)

தன்னை "**கொல்லிக்காவலன் கூடல் நாயகன்**" என்று தனது பாசுரங்களில் தலைக்கட்டிக் கூறுவதாலும், கோதைப் பிராட்டி குலசேகராழ்வாரை **"நாயகப் பெண்பிள்ளாய்"** என்று விளிக்கிறார் என்றும் அர்த்தம் கொள்வார்கள்!!!

மேலும், ஒரு ஹாரத்தின் (மாலை) நடுவில் இருக்கும் கல், **'நாயகக்' கல்** என்றழைக்கப்படும். குரு பரம்பரை எனும் மாலையின் நடுநாயகமாக ஜொலிப்பவர் எம்பெருமானாரான ராமானுச முனி. அது போல, ஆழ்வார்கள் வரிசை எனும் மாலையில் நடுநாயகமாகத் திகழ்பவர் குலசேகரப் பெருமாள். மாலையின் ஒரு புறம், பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் திருமழிசையாழ்வார் மற்றும் நம்மாழ்வார் என்று ஐவர்,

மறுபுறம் பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப்பொடி, திருப்பாணர், மற்றும் திருக்கலியன் ஆகியோர். நடுவில் குலசேகர ஆழ்வார். இதை ஸ்வாமி தேசிகன் அதிகார சங்கிரகத்தில் ஆழ்வார்கள் கோஷ்டியைச் சொல்லும்போது

"பொய்கைமுனி பூதத்தார் பேயாழ்வார் தண்
பொருநல் வரும் குருகேசன் விட்டுசித்தன்
துய்ய குலசேகரன் நம்பாணநாதன்
தொண்டரடிப்பொடி மழிசைவந்த சோதி
வையமெல்லாம் மறைவிளங்க வாள்வேலேந்தும்
மங்கையர்கோன் என்றிவர்கள் மகிழ்ந்து பாடும்
செய்யதமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதி
தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே" -(அதிகார சங்கிரகம் - 1)

என்றும்,

வையகமெண் பொய்கைபூ தம்பே யாழ்வார்
மழிசையர்கோன் மகிழ்மாறன் மதுர கவிகள்
பொய்யில்புகழ்க் கோழியர்கோன் விட்டு சித்தன்
பூங்கோதை தொண்தரடிப் பொடி பாணாழ்வார்
ரையனருட் கலியனெதி ராசர் தம்மோ
டாறிருவ ரோரொருவ ரவர்தாஞ் செய்த
துய்யதமி ழிருபத்து நான்கிற் பாட்டின்
றொகைநாலா யிரமுமடி யோஹங்கள் வாழ்வே. - (பிரபந்தசாரம் – 17)

என்றும் பாசுரத்தில் குலசேகர ஆழ்வாரை நடுவில் வைத்துப் படியது "**நாயகப் பிள்ளாய்**" என்று ஆண்டாள் இந்த பாசுரத்தில் குலசேகர ஆழ்வாரை நினைத்து சொல்லியுள்ளதை ஸ்வாமி தேசிகனும் சொல்லியுள்ளார் என்றும் அனுபவிக்கலாம்.

நாராயணன் மூர்த்தி கேசவனை……………..

திருப்பாவையில் நாராயண நாமம் 3 பாசுரங்களில் போற்றப்பட்டுள்ளது.

(நாராயணனே நமக்கே பறை தருவான் 1, நாயகப் பெண் பிள்ளாய் நாராயணன் மூர்த்தி – 7, நாற்றத் துழாய் முடி நாராயணன் நம்மால் 10).

ஸ்ரீமன் நாராயணன் தான் ஸர்வ வ்யாபி. அவனே ஸர்வோத்தமன் என்று ஏற்கனவே பல வகையில் முந்தைய பாசுரங்களில் ஆராய்ந்தோம். பகவான் ஆச்சார்யனாக பகவத் கீதையை உபதேசித்தால், குரு பரம்பரையில் ஸ்ரீமன் நாராயணனே முதல் ஆசார்யன் என்று

"பீதக வாடைப் பிரானார் பிரம குருவாகி வந்து" என்று நம்மாழ்வார் அனுசந்தானம் பண்ணியதை மனத்தில் கொள்ள வேண்டும். அந்த வகையில், ஸ்ரீமன் நாராயணனே ஊழி முதல்வன் என்பதற்கு இன்று மற்றொரு ப்ரமாணமாக விஷ்ணு புராணத்தில் உள்ள ஒரு வாக்யத்தை நினைவு கொள்வோம்.

"**ஜ்யோதிம்ஷி விஷ்ணு: பு4வநாநி விஷ்ணு:**

வநாநி விஷ்ணு: கி3ரயோ தி3ஶஶ்ச

நத்3யஸ் ஸமுத்3ராஶ் ச ய ஏவ ஸர்வம்

யத3ஸ்தி யந்நாஸ்தி ச விப்ரவர்ய................" -(விஷ்ணு புராணம் 2-12-38)

ஜோதிகளும் விஷ்ணுவே -- உலகங்கள் அனைத்தும் விஷ்ணுவே. காடுகளும், மலைகளும் திசைகளும் விஷ்ணுவே. நதிகளும் ஸமுத்ரங்களும் விஷ்ணுவே. -- ஸர்வமும் விஷ்ணுவே என்று சொல்கிறது. இப்படி, **ஸர்வம் விஷ்ணு மயம் ஜக3த்** என்று தானே காரணமாகவும், காரியமாகவும் இருக்கிறான் ஸ்ரீமன் நாராயணன். அதனால் தான் ஆழ்வார் **தமர் உகந்தது எவ்வுருவம், அவ்வுருவம் தானே** என்றார்.

நாராயண பரம் ப்3ரஹ்ம தத்வம் நாராயண: பர:

நாராயண பரோ ஜ்யோதி ராத்மா நாராயண: பர: -(நாராயண ஸூக்தம்)

என்று நாராயண ஸூக்தத்தில் **நாராயணனே ஸர்வமும்** என்று வேதம் சொல்வதை முதல் பாசுரத்திலேயே **நாராயணனே நமக்கே பறை தருவான்** என்று ஆண்டாள் நிர்த்தாரணம் செய்துள்ளாள். இந்தப் பாசுரத்திலும் நாராயண ஸப்தத்தின் ஏற்றத்தை **நாராயணன் மூர்த்தி கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ** என்று சொல்கிறாள்.

ஆர்த்தா விஷண்ணா: ஶிதி2லாச் சபீ4தா:

கோ4ரேஷு ச வ்யாதி4ஷு வர்த்தமாநா: |

ஸங்கீர்த்ய நாராயண ஶப்3த2மாத்ரம்

விமுக்த து3:க்கா2: ஸுகி2நோ ப24வந்தி ||

என்று விஷ்ணு சஹஸ்ரநாம பலச் ஸ்ருதியில் சேவிக்கிறோமே!

[மனக்கவலை கொண்டவர்கள், துக்கத்தால் வருந்துபவர்கள், சொத்துகளை இழந்தவர்கள், பயம் கொண்டவர்கள், தீராத நோயினால் வேதனையுறுபவர்கள் என அனைவரும் 'நாராயணா' என்ற நலந்தரும் திருநாமத்தை மனமாற உச்சரித்த அடுத்த க்ஷணமே அந்தத் துன்பங்களிலிருந்து விடுபட்டு சுகமடைவார்கள். அப்படியொரு ஸ்மரணை பண்ணும் அனுபவத்தை/அமைதியை எங்களுக்கு அளிப்பாய் நாராயணா! " என்பது மேற்சொன்ன விஷ்ணு சஹஸ்ரநாம பலச் ஸ்ருதி ஶ்லோகத்தின் பொருள்.]

ஆபோ நாராயண என்றபடி, தண்ணீரை ஆஸ்ரயமாக கொண்டவனே நீர் வண்ணனான நாராயணன்.

நாரம் என்றால் நீர். அணம் என்றால் வழி, அண்மை என்று பொருள் படும். நாரணம் என்பது நாரம் + அணம். எனவே, நாரணன் என்பது நீரை வழியாக – இடமாகக் கொண்டவன் என்றபடி, நீர்மையன் என்று பொருள் தந்து, பாற்கடலில் பள்ளி கொள்ளும் பரந்தாமன் – ஸ்ரீமந் நாராயணன் என்றாகும்..

வடமொழி இலக்கணத்தில் '**தத்புருஷ-ஸமாஸம்**' (வேற்றுமைப்புணர்ச்சி), '**பஹுவ்ரீஹி ஸமாஸம்**' (அன்மொழித்தொகை) என்று இருவித சொற்புணர்ச்சிகள் உண்டு. 'நாராயண' என்பது **நர + அயண** என்றாகும். 'நர', 'அயண' ஆகிய இரண்டு சொற்களைச் சேர்க்கும் போது, சொற் புணர்ச்சியில் இரண்டு விதமாகவும் சேரும்.

நாராணாம் அயணம் நாராயணம். அதாவது, நாரங்களு**க்கு** அயணம், என்பது முதல் வகை.

நாரா: அயணம் யஸ்ய ஸ: நாராயண: அதாவது 'நாரங்க**ளை** அயணமாக (நுழையப்படும் பொருளாக) உடையவர்' என்பது இரண்டாவது வகை. உயிருள்ளவை, உயிரில்லாதவை இரண்டும் இல்லாத இடத்திலும் அவன் உளன் -- இது முதல் வகைப் புணர்ச்சியினால் ஏற்படும் பொருள். இதை 'புறப்பரவல்' ('பஹிர்-வ்யாப்தி) என்று வேதாந்தத்தில் கூறுவர்.

சேதன அசேதனங்களிலும், தான் இல்லாத இடமேயில்லை என்று, அவன் எங்கும் கலந்து உள்ளுறைப் பொருளாக உள்ளான் -- இது இரண்டாவது வகைப் புணர்ச்சியினால் ஏற்படும் பொருள். இந்த '**உள்ளுறைதலை**' **அந்தர்-வ்யாப்தி** என்று வேதாந்தத்தில் கூறுவர்.

யச்ச கிஞ் சிஜ் ஜக$_3$த் ஸர்வம் த்$_3$ருச்யதே ஶ்ரூயதேபி வா |

அந்தர் ப$_3$ஹிஶ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தி$_2$த: || -(நாராயண ஸூக்தம்)

என்ற உபநிஷத் வாக்யப்படி, எல்லாவற்றிலும் உள்ளிலும் வெளியிலும் நிறைந்தவனாய், உள்ளதற்கெல்லாம் உறைவிடமாகியவன் ஸ்ரீமந் நாராயணன்.

இவ்விதமாக, வடிவம் இல்லாத நீர் எப்படி தான் இடப்பட்ட பொருளின் வடிவம் பெறுகின்றதோ, அது போன்றே நீர்மையனான ஸ்ரீமந் நாராயணனும் "**தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே**" என்றும்,

"**நிலனிடை விசும்பிடை உருவினன் அருவினன் புலனொடு புலனலன், ஒழிவிலன், பரந்த அந் நலனுடை யொருவன்**" என்றும்,

"திடவிசும்பு எரிவளி நீர்நிலம் இவைமிசை படர்பொருள் முழுவதுமாய் அவையவைதொறும் உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன் சுடர்மிகு சுருதியுள் இவையண்ட சுரன்" என்றும் நாம்மாழ்வார் அனுபவித்தபடி, அடங்காது எங்கும் பரந்த அப்பரமனான ஸ்ரீ மந் நாராயணன் எதிலும் அடங்கி விடுவான். இப்படி **அடங்காதவன் அடங்கிவிடும்** சௌலௌப்யம் கொண்டவன். எனவே, **அவனை, அளந்திட முடியாது. உள்ளத்தில் கொள்ளத் தான் முடியும்**.

மற்றொரு விதமாக, சமஸ்க்ருத மொழியில் **நரம்** என்றால் மனிதன் உள்ளிட்ட உயிர்ப் பொருள். **நாரம்** என்றால் நரங்களின் சேர்க்கை அல்லது கூட்டம். அயணம் என்றால் அன்மை அல்லது புகல், இடம் என்று பொருள்படும். ஆக, நாராயணம் என்பது நாரம் + அயணம் = நாராயணம். எனவே, நாராயணன் என்பது அனைத்து உயிர்களும் சேரும் இடமானவன் அல்லது அனைத்திற்கும் புகலிடமானவன் என்பதாகும். **அப்படிப்பட்ட நாராயணனை ஸேவிக்க அழைக்கிறாள்.**

நாராயண நாமத்தின் பெருமையை ஸ்வாமி நிகமாந்த மஹா தேசிகன் பன்னிருநாமம்- என்று அருளியுள்ள பிரபந்தத்தில் போற்றியுள்ளதையும் இங்கு அனுஸந்தித்து அனுபவிக்க வேண்டும்.

நாரணனாய் நல்வலம்புரி நாலுமுகந்தெ டுத்தும்
ஊரணிமேகமெனவே யுதரமுமேற்குநின்றும்
ஆரணநூறந் தருளால் அடைகலங்கொண்டருளும்
வாரணவெற்பினி மழைமுகில்போல் நின்ற மாயவனே -(பன்னிருநாமம் – 1)

நாராயணன் மூர்த்தி கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ......

கேசவனை ....

கேசவன் என்ற திருநாமத்தை திவ்யப் பிரபந்தத்தில் 24 பாசுரங்களில் ஆழ்வார்கள் அனுபவித்திருக்கிறார்கள். திருப்பாவையில் கேசவ நாமம் 2 பாசுரங்களில் போற்றப்பட்டுள்ளது. (கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ – 6ம் பாசுரம்.. வங்கக் கடல் கடைந்த மாதவனை கேசவனை -30ம் பாசுரம்)

கேசவன் என்பதற்கு அர்த்தம்:

1) கேசம் என்றால் முடி. நீண்ட கேசத்தை உடையவன் கேசவன். என்னரங்கத் தின்னமுதர், குழலழகர் என்று ஆண்டாள் நாச்சியார் தன் மற்றொரு பிரபந்தமான நாச்சியார் திருமொழியில் எம்பெருமானின் குழலழகை வர்ணித்துள்ளாள். –

2) மைவண்ண நறுங்குஞ்சி குழல்பின் தாழ என்று திருநெடுந்தாண்டகம் பாசுரத்தில் –திருமங்கை ஆழ்வார் எம்பெருமானின் குழல்அழகை (கேசம்) சொல்லியுள்ளார்..

3) கேசி என்ற அசுரனை அழித்தவன் என்பதால் கேசவன். (மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய என்று ஆண்டாள் நாச்சியார் திருப்பாவையின் 8ம் பாசுரத்தில் அருளியுள்ள மாவய்ப் பிளந்த கேசவன் விருத்தாந்த்த்தை அனுபவிப்போம்.)

4) ப்ரம்மனையும் சிவனையும் தன் திருமேனியில் வைத்திருப்பவன் என்பதால் கேசவன். அதாவது, "**க + அ + ஈச + வ** " என்பதே **கேசவ** என்றாகும். 'க' என்றால் பிரம்மா; '**அ**' என்றால் விஷ்ணு; 'ஈச என்றால் ருத்ரன்., "**க + அ + ஈச + வ** மூன்றும் சேர்ந்தால் கேசவ என்றாகும். இப்படி, பிரம்மனையும், ருத்ரனையும், தமக்குள் கொண்டவர் கேசவன் என்பது தத்வார்த்த விளக்கமாகும். இதைத்தான்,

ஸப்$_3$ரஹ்மா ஸ்ஶி வஸ்ஸேந்த்$_3$ர ஸோs **க்ஷர: பரமஸ் ஸ்வராட்** என்று விராட் புருஷனான ஸ்ரீமந் நாராயணனை உருவகப்படுத்தி நாராயண ஸூக்தம் கோஷிக்கின்றது.

5) தைத்ரீய ஆரண்யகத்தில்,

"**ஆகாசாத் பதிதம் தோயம் யதா$_2$ கச்சதி ஸாகரம் |**

ஸர்வதே$_3$வ நமஸ்கார: கேசவம் ப்ரதி கச்சதி ||

என்று எங்கும் பொழியும் மழை நீர் சமுத்திரத்தை அடைவது போல் எந்த தேவதைக்கும் செய்யும் நமஸ்காரங்களும் கேசவனாகிய விஷ்ணுவையே சென்றடையும் என்று விளக்குகின்றது.

எனவே,

தீரும் நோய் வினைகள் எல்லாம் திண்ணம் நாம் அறியச் சொன்னோம்

பேரும் ஓராயிரத்துள் ஒன்று நீர் பேசுமினே- (திருவாய்மொழி 10-2-3)

என்றும்

கெடுமிடர் ஆயவெல்லாம் கேசவா வென்ன நாளும்

கொடுவினை செய்யும் கூற்றின் தமர்களும் குறுக கில்லார்

விடமுடை அரவில் பள்ளி விரும்பினான் சுரும்பல் அற்றும்

தடமுடை வயல் அனந்தபுர நகர்ப் புகுதுமின்றே. - - (திருவாய்மொழி 10-2-1)

என்றும்

கேட்பார்கள் கேசவன் கீர்த்திஅல்லால் மற்றும் கேட்பரோ

கேட்பார் செவிசுடு கீழ்மை வசைவுகளே வையும்

சேண்பால் பழம்பகைவன் சிசு பாலன் திருவடி

தாள்பால் அடைந்த தன்மை அறிவாரை அறிந்துமே - (திருவாய்மொழி 7-5-3)

என்றும் நம்மாழ்வார் "கேசவா" என்று நாராயணனின் ஒரு நாமத்தைச் சொன்னால் அனைத்து வினைகளும் தீயுனுள் தூசாகும் என்று கேசவ நாம மகிமையை சொன்னதைத் தான் **நாராயணன் மூர்த்தி கேசவனைப் பாட** என்று இந்தப் பாசுரத்தில் ஆண்டாள் அழைக்கின்றாள்.

கேசவ நாமத்தின் பெருமையை ஸ்வாமி நிகமாந்த மஹா தேசிகன் பன்னிருநாமம் என்று அருளியுள்ள பிரபந்தத்தில் ப்போற்றியுள்ளதையும் இங்கு அனுஸந்தித்து அனுபவிக்க வேண்டும்.

கேசவனாய்நின்று கீழைத் திசையிலு நெற்றியிலுந்

தேசுடையாழிகள் ணான்குடன் செம்பசும்பொன் மலைபோல்

வாசிமிகுத்தெனை மங்காமற் காக்கு மறையதனால்

ஆசைமிகுத்த அயன்மகவேதியிலற்புதனே. -(பன்னிருநாமம் – 1)

நாராயணன் மூர்த்தி கேசவனை............

நாராயணன் மூர்த்தி கேசவனை என்ற சொற்களின் கையாடலில் **மூர்த்தி** என்று ஆண்டாள் இரண்டு திருநாமங்களுக்கும் சேர்த்தே அருளியுள்ளாள். எம்பெருமானின் மூர்த்தி வைபத்தை சரணாகதி கத்யத்தில் எம்பெருமானார் ராமானுஜர் அனுபத்து அருளியுள்ளதை இங்கு நினைவில் நிறுத்தி ஆண்டாளின் உள்ளக்கிடக்கையை அறியலாம்.

எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணின் கல்யாண குணங்களையும் அவன் திருமேனியை அலங்கரிக்கும் பலவித அணிகலன்களையும், திவ்யாயுதங்களையும் ஸ்ரீமத் ராமானுஜர் ஶரணாகதி கத்யத்தில் அனுபவித்ததைக் கொண்டு எம்பெருமானின் திருமேனி மூர்த்தி விசேஷத்தை அனுபவிக்கலாம்.:

எம்பெருமான் திருமேனியை அலங்கரிக்கும் அணிகலன்கள்:

ஸ்வோசித விவித$_4$ விசித்ராநந்த ஆஶ்சர்ய

நித்ய நிரவத்ய$_3$ நிரதி ஶயஸுக$_3$ந்த$_4$

நிரதிஶய ஸுக$_2$ஸ்பர்ஶ நிரதிஶயௌஜ்வல்ய கிரீடமகுட

சூடா$_3$வதம்ஸ மகர குண்ட$_3$ல க்$_3$ரைவேயக ஹார கேயூர கடக

ஸ்ரீவத்ஸ கௌஸ்துப$_4$ முக்தா தா$_3$மோத$_3$ரப$_3$ந்த$_4$ந பீதாம்ப$_3$ர காஞ்சீகுண$_3$

நூபுராத்3யபரிமித திவ்3ய பூஷண ! - (ஶரணாகதி கத்யம்)

எம்பெருமான் திருமேனியை அலங்கரிக்கும்திவ்யாயுதங்கள்.:

ஸ்வாநுரூப அசிந்த்யஶக்தி ஶங்க2 சக்ர க3தா3ஸி ஶார்ங் கா3த்3ய

ஶங்க2 யேய நித்ய நிரவத்3ய நிரதிஶய கல்யாண தி3வ்யா ஆயுத4 :..........

- (ஶரணாகதி கத்யம்)

இவ்வாறு **மூர்த்தி** என்ற பத்த்திற்கு எம்பெருமானின் ஸ்வரூப லாவண்யத்தை உள்ளுரைப் பொருளாக்க் கொள்ளலாம்.

"கேட்டே கிடத்தியோ?" ....

"கேட்டே கிடத்தியோ?" என்று ஆண்டாள் பாடும்போது, பாகவதர்களிடமிருந்து ராமாயண காவியத்தை திரும்பத் திரும்ப கேட்டு, ராம பக்தியில் மூழ்கித் திளைத்திருந்த குலசேகரப் பெருமானை இப்பாசுரம் துயிலெழுப்புவதாக பூர்வாச்சார்யர்கள் அனுபவித்துள்ளார்கள்.

திறவேலோ ரெம்பாவாய் ....

பரமனைப் பற்றுவதற்கு பிரபத்தி உபாயத்தை கைக்கொள்ள வருவாயாக ! இப்படிப்பட்ட பகவத் அனுபவங்களை எற்றுக் கொண்டு (= ஏல்), ஆராய்ந்து தெளிவாய் (=ஓர்) **எம்பாவாய்** = தோழியே என்று ஆண்டாள் அழைக்கிறாள்.

நலமுடனும் பக்தியுடனும் **நாராயணன் நாமம்** சொல்லி, **கேசவன் கீர்த்திஅல்லால் மற்றும் கேட்பமோ** என்ற நிலையைப் பெற, நின்னருளால் கதியின்றி மற்றொன்றும் அறியோம் தாயே, அறியாத எங்களை அரி நாமம் அறிய வைத்து, இற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் அரியின் திருவடியே அடிபணிய அருள் தருவாய் ஜெகன் மாதாவே என்று ஆண்டாள் அடி பணிவோம் என வேண்டி இன்றைய பாசுர விளக்கத்தை நிறைவு செய்கிறேன்.

ஆண்டாள் திருவடிகளே ஶரணம்

கவிதார்க்கிக ஸிம்ஹாய கல்யாண கு3ணஶாலிநே

ஸ்ரீமதே வேங்கடேஶாய வேதா3ந்த கு3ரவே நம:

***தாஸன்

ராமபத்ர தாதம்

22-12-2020

புதுச்சேரி

9443331869

<ramabathiran@gmail.com>